

# சிறந்த தலைவர்களாவோம் 04

மனிதன் இயல்பாகவே சேர்ந்து வாழும் இயல்புடையவனாக விளங்குகின்றான். கூட்டுச்சேர்ந்து சமூகத்தில் நிறைவேற்றப்படும் செயற்பாடுகளுக்குத் தலைமைத்தும் அவசியமாகும். சிலரிடம் தலைமைத்துவப் பண்புகள் இயல்பாகவே காணப்பட்டாலும், அநேகர் கல்வி, அனுபவம் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் மூலமே சிறந்த தலைமைத்துவத்தினைப் பெறுகின்றனர். அதன் மூலம் ஏனையவர்களை ஒழுங்காக வழிநடத்தி சமூகத்திற்கு நன்மையான விளைவுகளைப் பெற்றுத்தர முடிகிறது. அந்தவகையில் நீங்கள் இவ்வலகைக் கற்பதன் மூலம் தலைமைத்துவம் என்றால் என்ன என்பதையும், சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும், தலைமைத்துவத்தைப் பின்பற்றுவது பற்றியும் அறிந்து கொள்ளலாம். இது நீங்கள் நல்ல தலைவர்களாகத் திகழ்ந்து உங்களது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் கூட நல்ல தொண்டினைச் செய்வதற்கு உதவலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தலைமைத்துவமானது சமூக நடவடிக்கைகள் அனைத்திற்கும் அவசியமான காரணியாகும். மனிதன் பிறருடன் கூட்டுச்சேர்ந்து வாழவும், நடவடிக்கைகளில் ஈடுபடவும் முற்பட்டதன் விளைவாகத் தலைமைத்துவம் தோற்றம் பெற்றது.



உரு 4.1 பாடசாலை அதிபர் உறையாற்றுதல்



உரு 4.2 பாடசாலை விழாக்களின் போது தலைமைத்துவம்

''கூட்டுச் செயற்பாட்டின் மூலம் தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, நபர் ஒருவர் தமது குழுவில் உள்ள அங்கத்தவர்களை வழி நடத்துதல் தலைமைத்துவம்'' என்று குறிப்பிடலாம்.

வேறு வகையில் குறிப்பிடுவதாயின் தலைமைத்துவம் என்பது குறிக்கோள்களை அடையும் வழிமுறைகளினூடாகப் பின்பற்றுவோரைச் செயற்பட ஊக்குவிப்பதன் மூலம் அவர்களைத் திட்டமிட்ட திசையில் செலுத்தும் ஒரு செயன்முறையாகும்.

நீங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல தலைவர்களையும், அவர்களின் தலைமைத்துவப் பண்புகள் பற்றியும் அறிந்திருப்பீர்கள். தலைமைத்துவமானது முதலில் குடும்பத்திலேயே ஆரம்பிக்கிறது. உங்களது குடும்பத் தலைமைத்துவம் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். தந்தையோ அல்லது தாயோ, கூட்டுக் குடும்பமாயின் குடும்பத்தின் மூத்தவர்களோ குடும்பத்தில் தலைவர்களாக விளங்குவர். பாடசாலையில் கூட தலைமைத்துவம் வகிக்கின்ற நிலைமைகளை உங்களால் காணமுடியும். முக்கியமாகப் பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், மாணவத் தலைவர், பாடசாலை விளையாட்டுக் குழுவின் தலைவர் ஆகியோர் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவர்கள் யாவரும் தத்தமது பொறுப்புக்களைக் கொண்டு தலைமைத்துவத்தை வகிக்கின்றனர். மேலும் சமூகத்தை நோக்கினாலும், சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் தலைமைத்துவம் வகிப்போரை நீங்கள் காணலாம்.

ஏதாவது ஒரு குழுவினர் தமது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதன் அங்கத்தவர்களைச் செயற்படுத்துவதற்கு தலைமைத்துவம் அவசியமாகும். சிக்கலான சமூகத்தில் சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் பொதுத்தேவைகளை ஒழுங்குபடுத்தி இயங்கச் செய்வதற்கும் வழி நடத்தவும் தலைமைத்துவத்தின் வழிகாட்டல் முக்கியமாகின்றது.

மனிதன் உயர்பகுத்தறிவு படைத்தவன் என்ற வகையில் தாம் சார்ந்துள்ளவர்களை வழிநடத்துவதற்கான முயற்சியில் இயல்பாகவே தலைமைத்துவத்தை வழங்கக் கூடியவனாக விளங்குகின்றான். நல்ல தலைவன் தமது குழுவின், அல்லது அமைப்பின் எதிர்பார்ப்புகளை அடைவதற்காக அர்ப்பணிப்புடன் தொழிற்படுவான் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலைமைத்துவம் பற்றிய சில கருத்துகள்

" ஒரு சமூகத்தின் அடித்தளம் அதன் தலைமைத்துவத்தின் மீதே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. "

" உங்களுக்கு நீங்களே தலைவராக இருங்கள்"

" ஒரு சமூகத்தின் தலைவர் அம்மக்களின் சேவகராவார்"

"உரிய நோக்கங்களை அடைவதற்காகப் பின்பற்றுவோரை வழிநடத்தவும் அவர்களால் செய்ய முடியாதவற்றைச் செயற்படுத்துவதற்கும் தலைமைத்து வத்திடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது."

தலைமைத்துவம் என்பது தனிப்பட்டோருக்கும் குழுக்களுக்கும் இடையேயுள்ள தொடர்பின் மூலம் பொதுவான குறிக்கோள்களை அடைவதற்கு வழிகாட்டலை மேற்கொள்வதாகும்."

எந்தவொரு தனிப்பட்ட நபரும் தலைமைத்துவத்தைப் பெற வேண்டுமாயின் அதற்கு அவர் முதலில் ஆயத்தமாக வேண்டும். தலைவர் ஒருவர் தன்னைப் பின்பற்றுவோரைச் சரியான குறிக்கோள்களில் வழிநடத்துவதற்கு முயற்சி செய்வார். பின்பற்றுவோரைப் பற்றி அறிந்து நடந்துகொள்வார். அவர்களது கருத்துகளைக் கேட்டறிந்து கொள்வார். அவர்களுக்குச் சமமான இடத்தை வழங்குவதுடன், அவர்களை மதிப்பவராகவும் விளங்குவார். இவ்வாறு தலைவர்கள் தமது தலைமைத்துவத்தை வழங்கும் போது அவர்களைப் பின்பற்றி நடப்பவர்களும், தலைவர்களை மதிக்கக் கூடியவர்களாக இருப்பார்.

ஒரு நாட்டிலோ அல்லது ஒரு பிரதேசத்திலோ வாழும் மக்களின் பண்புகள், பழக்க வழக்கங்கள், பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் வேறுபட்டிருப்பினும் நல்ல தலைமைகளும் அவர்களது பண்புகளும் மாறலாகாது. ஒரு தலைவரின் நடத்தையில் மிகவும் உயர்ந்தளவு நம்பிக்கை உருவாக்கப்படவும், பாதுகாக்கப்படவும் வேண்டியது அவசியமாகும்.

**செயற்பாடு I**

- உமது பாடசாலையில் தலைமைத்துவம் வகிக்கின்ற பல்வேறு நபர்களைப் பற்றி அறிந்து, அவர்களது பதவி குறித்த பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரிக்குக.
- பாடசாலையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்படி தலைவர்கள் செய்கின்ற பணிகளைக் குறிப்பிடுக.

## 4.1 தலைமைத்துவத்தின் பண்புகள்

தலைமைத்துவம் என்பது ஓர் அபூர்வமான ஆற்றலாகும் என்பது குறித்த விளக்கத்தினை இதுவரை பெற்றிருப்பீர்கள். இப்பொழுது இத்தலைமைத் துவத்தைக் கொண்டிருப்பவர்களிடம் காணப்படவேண்டிய அவசியமான பண்புகள் குறித்த விளக்கத்தை நீங்கள் பெறலாம்.

தலைவர் என்பவர் தமது குழுவைச் சேர்ந்தவர்களைப் பாதுகாத்து, முன்னேற்றுவதற்கான தூர சிந்தனையுடன் செயற்படுபவராக விளங்குவார். சிறந்த தலைவர்களிடத்தில் பல குணப்பண்புகள் காணப்படுவதை நீங்கள் அவதானிக்க முடியும்.

### உயிரினங்களில் தலைமைத்துவ ஆற்றல்

மனிதர்களில் மாத்திரமன்றி ஏனைய உயிர்களிடத்திலும் தலைமைத்துவப் பண்புகள் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக கூட்டுச் சேர்ந்து வாழும் உயிரினங்களில் தேனீக்களிடம் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் காணப்படுகின்றன.



உரு 4.3 - தேனீக்களின் கூட்டுவாழ்வு

தேனீக்கள் தமது கூட்டினை அமைப்பதன் முதல் சகல வேலைகளையும் தலைமைத்துவத்தின் கீழ் கூட்டாகவே செய்கின்றன. தலைமைத் தேனீயின் கட்டளைகளை மற்றைய தேனீக்கள் ஏற்றுச் செயற்படுகின்றன. இந்தக் கூட்டு முயற்சியில் தங்கள் குழுவைப் பாதுகாத்தல், தூர இடங்களிலிருந்து தேனை எடுத்துவரல் என்பன முக்கிய பணிகளாகும். இவை யாவும் மனிதர்களாகிய எமக்கு மிகச் சிறந்த படிப்பினைகளாகும்.

நீங்களும் கூட இது வரை ஏதாவது சந்தர்ப்பத்தில் தலைமைப் பதவிகளை வகித்திருக்கக்கூடும். வகுப்புத்தலைவராக, மாணவத் தலைவராக, பாடத்தலைவராக தலைமைப் பதவிகளை நீங்களோ அல்லது உங்களது நண்பர்களோ வகித்திருக்கலாம் அல்லவா? அத்தகைய சந்தர்ப்பங்களில் நீங்களோ அல்லது உங்களது நண்பர்களோ சிறந்த முறையில் செயற்பட்டீர்களா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கீழுள்ள உருவை அவதானியுங்கள். சிறந்த தலைவரிடம் காணப்படக் கூடிய தலைமைத்துவப் பண்புகள் யாவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.



**உரு 4.4 விளையாட்டின் போது ஏற்படும் தலைமைத்துவம்**

## செயற்பாடு II

பின்வரும் உரையாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தரம் 8 B வகுப்பின் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் பாட ஆசிரியை சுபாசினி மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்.

ஆசிரியை : உங்களது வகுப்புத் தலைவர் யார்? அவரை எப்படித் தெரிவு செய்தீர்கள்...?

மாணவர் : பிரகாஷ் தான் எங்கள் வகுப்புத்தலைவர் - நாங்கள் கலந்துரையாடி வகுப்பு மாணவர்கள் எல்லோரும் விரும்பி அவரைத் தெரிவு செய்தோம்... டீச்சர்!

ஆசிரியை : நல்லது.... ஏன் பிரகாஷைத் தெரிவு செய்தீர்கள்? காரணத்தைக் கூற முடியுமா?

தில்ஷான் : அவர் மிகவும் மரியாதையுடன் நடப்பவர், பொறுமைசாலி......

இஷாரா : பிரகாஷ்...... நம்பிக்கையானவர்..... வாக்குறுதிகளை சரியாக நிறைவேற்றுவார்......

தேவி : எந்த விடயத்தையும் எங்களுடன் வகுப்பில் கலந்துரையாடி முடிவுசெய்வார்.... எந்த வேலையையும் முறையாகவும், ஒழுங்காகவும் அவர் செய்து முடிப்பார்

முஹம்மட் : எந்த சந்தர்ப்பத்திலும் பிரகாஷ் தான் செய்யும் தவறுகளை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்.

சஹீதா : பிரகாஷ் மிகவும் நேர்மையானவர். பொறுமையுடன் வேலைகளைச் செய்வார்.....

முரளி : திறந்த மனதுடன் செயற்படுபவர் எந்தத் தகவலையும் முறையாக வகுப்புமாணவர்களுக்கு அவ்வப்போது தெரிவித்து விடுவார்.


ஆசிரியை : அப்படியா! மிக்க நல்லது........ நீங்கள் நல்ல பண்புகளுள்ளவரைத்தான் வகுப்புக்குத் தலைவராக ஆக்கியுள்ளீர்கள். பிரகாஷைப் போலவே நீங்களும் நல்ல தலைமைப் பண்புள்ள மாணவர்களாக வரவேண்டும்.

(i) மேலே உரையாடலில் காணப்படும் சிறந்த தலைமைத்துவப்பண்புகளைக் கண்டறிந்து அவற்றை அட்டவணைப்படுத்துக.

(ii) உமது அபிப்பிராயப்படி சிறந்த தலைவர் ஒருவரிடம் இருக்க வேண்டிய வேறு சில தலைமைத்துவப் பண்புகளை எழுதுக.

(iii) நீங்கள் பிரகாஷ் ஆக இருந்தால் தலைவராக நண்பர்கள் மத்தியில் ஆற்றும் உரை ஒன்றைச் சுருக்கமாக எழுதுக.

(iv) ‘‘தலைவர்களைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்’’ பற்றிப் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஆக்கம் ஒன்றை வரைக.




மேற்படி உருவினை அவதானித்தீர்களா? தலைவரிடத்தில் இருக்க வேண்டிய எத்தனையோ தலைமைத்துவப் பண்புகளை இவ்வுரு மூலம் விளங்கலாம். அத்துடன் தலைமைப் பதவிகளுக்கு மேற்படிப் பண்புகள் நிறைந்த தகுதியான வர்களையே நியமிக்க வேண்டும். தகுதிவாய்ந்த திறமையான ஒருவர் இருக்க தகுதியற்றவர்களைத் தலைவராக நியமிக்கக் கூடாது. தலைமைத்துவத்துக்குப் பொருத்தமில்லாதவர்கள் நியமிக்கப்படுவார்களானால் குறிக்கோள்களை அடைய முடியாது. சமூக நிலைமைகள் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே மாணவப்பருவத்திலிருந்தே நல்ல தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும்.

## நீங்களும் தலைவராகலாம்

உங்களாலும் சிறந்த தலைவர்களாக வர முடியும். அப்படியானால் மேற்படி சிறந்த தலைமைத்துவப் பண்புகளை உங்களிடத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும். கல்வி கற்கும்போதும் பிறருடன் சேர்ந்து குழுவாகச் செயற்படும் போதும் இத்தகைய பண்புகள் உங்களிடம் வளர்ச்சியடையும். சிறந்த தலைவர்கள் அனைவராலும் மதிக்கப்படுவர்.

தலைமைத்துவத்துக்குரிய எல்லாப் பண்புகளும் உங்களிடம் இல்லாத போதும், ஒரு சில பண்புகளாவது காணப்படவே செய்யும். அவற்றை வைத்து ஏனைய பண்புகளை வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். ''தலைவர்கள்

பிறப்பதில்லை. பிறந்த பின்னர் உருவாக்கப்படுகிறார்கள்.'' என்ற கருத்துக்கு ஏற்ப நீங்கள் கல்வி கற்கும் போது அனுபவங்கள், செயற்பாடுகள் ஆகியவற்றி லிருந்து தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளலாம்.

பாடசாலையிலே தான் அதிகமான தலைமைத்துவப் பண்புகள் ஊட்டப்படுகின்றன. பாடசாலையில் வகுப்பறை வேலைகளைச் செய்தல், குழுவாகச் செயற்பட்டுப் பாடங்களைக் கற்றல், மாணவர் மன்றங்களில் தலைமை வகித்துச் செயற்படுதல், விளையாட்டுப் போட்டிகளில் தலைமை வகித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் உங்களது தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்ளலாம். ஒருவரிடம் காணப்படும் ஆளுமை, தகுதி என்பவற்றுக்கேற்பவே அவர் தலைமைப்பதவிக்குத் தெரிவு செய்யப்படலாம்.

மாணவர்களே! சிறிது நேரம் அமைதியாக இருந்து சிந்தியுங்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல்கள் தான் என்ன? என்னென்ன தலைமைத்துவப் பண்புகள் உங்களிடம் இருக்கின்றன என்பதைச் சுயமாகவே விசாரித்து, தேவையான தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அவற்றைப் பின்பற்றவும் முயலுங்கள். பணிவுடமை, அன்பு, பிறருக்கு உதவுதல், நேர்மை, திடநம்பிக்கை, பிறரையும் பிறரது கருத்துக்களையும் மதித்தல் போன்ற சிறந்த பண்புகள் உங்களிடத்தில் உருவாகும். இதன் மூலம் மிகச்சிறந்த சமூகப் பிரஜையாகவும் தலைவராகவும் நீங்கள் திகழலாம்.

சிறந்த தலைமைத்துவப் பண்புகளை உடைய எவருக்கும் தலைமைப்பதவிகளை ஏற்பதற்கு உரிமையும் பொறுப்பும் உண்டு. மாணவர்களாகிய உங்களுக்கு நீங்கள் கல்விகற்கும் காலத்தில் பல்வேறு தலைமைத்துவ அனுபவங்களும் பயிற்சிகளும் கிடைக்கலாம். அவற்றைக் கொண்டு எதிர்காலத்தில் சமூகத் தலைமைத்துவங்களை ஏற்றுச் செயற்படுத்தும் ஆற்றலையும் ஆளுமையையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

தலைமைத்துவத்தைப் பெற விரும்பும் எவருக்கும் மன உறுதி, அர்ப்பணசிந்தை, பயிற்சி என்பன அவசியமாகும். அப்படியானால் இன்றிலிருந்தே சிறந்த தலைவராவதற்காகச் சிந்தித்துச் செயற்பட்டுத் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வது நமது பொறுப்பாகும்.

நீங்கள் தலைவராக வருவதன் மூலம் எதிர்கால சமூகத்துக்கு அளவிடமுடியாத சேவையை வழங்கமுடியும். இதனால் வாழ்க்கையில் வெற்றி பெற்று, குடும்பத்திலும் சமூகத்திலும் சிறந்த முன்மாதிரி மனிதராக உங்களால் விளங்க முடியும் நீங்கள் எதிர்பார்க்கின்ற இலக்கினையும் அடைந்து கொள்ளலாம்.

எனவே அவற்றுக்காகத் தீர்மானங்களையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டு உங்களுக்கு கீழுள்ளவர்களைச் சரியாக வழி நடாத்தவும் சிறந்த தலைமைத்துவப் பண்புகள் அவசியமாகின்றன.

அனைவராலும் நாட்டிற்குத் தலைவராக வரமுடியாவிட்டாலும், அவரவரிடம் இருக்கின்ற தகுதி, ஆளுமையைக் கொண்டு பல்வேறு உயர்மட்டத் தலைமைப் பதவிகளைச் சமூகத்தில் வகிக்க முடியும். எனவே நாம் எமது தனித்துவத்தை விளங்கி, சிறந்த தலைமைத்துவப் பண்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காக நாம் பெற்றோர், ஆசிரியர்கள், மூத்தோர்கள்,சமூகத் தலைவர்கள் ஆகியோரது உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் நாளாந்த வாழ்வில் பல்வேறு கூட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலமும் இத்தகைய ஆற்றல்களையும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக் கொள்ளலாம்.

**செயற்பாடு III**

(i) நீங்கள் உங்களைப் பற்றிச் சிந்திப்பதன் மூலம் உங்களிடத்தில் காணப்படக்கூடிய தலைமைத்துவப் பண்புகளை எழுதுங்கள்.

(ii) நீர் எத்துறையில் தலைவராக வரவிரும்புகிறீர்? குழுவாகச் செயற்படுவதன் மூலம் அத்தலைமைப்பதவிகளின் பயன்கள் குறித்துக் கலந்துரையாடுக.

## 4.2 பல்வேறு தலைமைத்துவ வடிவங்கள்

தலைமத்துவம் பற்றி ஆராயும் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்த மூன்று விதமான தலைமைத்துவ வடிவங்கள் உள்ளன. அவை கீழ் வருமாறு.

### ஏகாதிபத்தியத் தலைவர்கள்



ஆட்சியாளன் தாமே தனித்துத் தீர்மானம் எடுப்பதோடு அவற்றைத் தமது உறுப்பினர்கள் மூலமாகச் செயற்படுத்துவர். குழு உறுப்பினர்களின் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. தன்னைப் பின்பற்றுவோரை மதிப்பது மில்லை.

**ஜனநாயகத் தலைவர்கள்**



ஜனநாயகத் தலைவர்கள் தீர்மானம் எடுத்தலின் போது குழு உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குவார்கள். உறுப்பினர்கள் எல்லோரும் தலைமைத்துவத்திற்காகத் தத்தமது பங்களிப்பை வழங்குவார்கள். கூட்டாகத் தீர்மானம் எடுத்துக் கூட்டாக செயற்படுத்துவார்கள்.

**தாராண்மைத் தலைவர்கள்**



தாராண்மைத் தலைவர்களின் கீழ் உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்பட முடியும். சுயாதீனமாகத் தீர்மானங்கள் எடுக்க முடியும். இங்கு எல்லா உறுப்பினர் களினதும் கருத்துகள் கவனத்தில் எடுக்கப்படுவதால், சில வேளைகளில் இத் தலைமைத்துவத்தின் கீழ் நிறுவனங்களில் குழப்ப நிலை ஏற்படலாம்.

## 4.3 தலைமைத்துவமும் அதனைப் பின்பற்றலும்.

கூட்டுச் செயற்பாடுகளின் நோக்கத்தை அடைவதற்கு தலைமைத்துவம் முக்கியமானதாகும். அதேபோன்று தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிதலும் அவசியமானதாகும். தனிப்பட்டோர் குழுக்களாகக் கூட்டுச் சேர்ந்து செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தலைமைத்துவத்தை ஏற்படுத்தியும், தலைமைத்துவத்திற்குக் கட்டுப்பட்டு அவற்றைப் பின்பற்றியும் செயற்படுவது என்பது முக்கியமானது.மனித வரலாற்றில் எத்தனையோ நிகழ்வுகளின் வெற்றிகள் தலைமைத்துவமும் அதனைப் பின்பற்றுவோரும் சரியாகச் செயற்பட்டமைக்குரிய சான்றுகளாக அமைகின்றன.

தலைமைத்துவமும் அதனைப் பின்பற்றுவதும் ஒன்றுசேர்ந்த இரு அம்சங்களாகும். இரண்டும் ஒன்று சேரும் போதே குழுக்கள் தமது நோக்கங்களை அடைந்து கொள்ள முடியும். அதாவது தலைவனும் அவனைப் பின்பற்றுவோரும் சரியாக இருப்பது அவசியமானது. தலைமைத்துவத்தைப் பின்பற்றி நடப்போர் சகல சந்தர்ப்பங்களிலும் அவரைப் பின்பற்றுவது கடமையாகும்.


கிராமத்தில் தலைவரைப் பின்பற்றி எவ்வாறு மக்கள் நடக்கிறார்கள்? பாடசாலையில் அதிபரின் வழிகாட்டலை எவ்வாறு ஆசிரியர்களும், மாணவர்களும் பின்பற்றுகின்றார்கள்? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வாறு சமூகத்தின் சிறப்பான இயக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் நல்ல தலைமைத்துவமும், அதனைப் பின்பற்றுவோரும் அவசியமாகும்.

''நல்ல தலைவருக்கு நல்ல பின்பற்றுபவர்கள் தேவை'' என்பது இதன் மூலம் தெளிவாகின்றதல்லவா.


இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தலைமைத்துவம் வகித்து அகிம்சா வழியில் சென்று வெற்றிகண்ட மகாத்மா காந்தி சிறந்த உலகத் தலைவராக மதிக்கப்படுகிறார். இலட்சக்கணக்கான மக்கள் அவரது தலைமைத்துவத்தைப் பின்பற்றினர். அதேபோன்று கறுப்பின அமெரிக்கர்களின் சிவில் உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தை வழிநடத்தி வெற்றியடைந்தவராக மார்டின் லூதர் கிங் விளங்குகிறார். அதே போன்று செவ்விந்தியர்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காகப் போராடிய சியட்டல் சிறந்த தலைவர்களுள் ஒருவராவார். இதே போல உலகத் தலைவர் வரிசையில் ஜவஹர்லால் நேரு, வின்ஸ்டன்ட் சேர்ச்சில், நெல்சன் மண்டேலா ஆகியோரும் அடங்குவர்.

எமது நாட்டுத் தலைவர்கள் கூட பிரித்தானிய குடியேற்ற ஆட்சிக்கு எதிராகத் தேசிய விடுதலை இயக்கங்களில் சேர்ந்து தலைமை வகித்துள்ளனர். அநகாரிக தர்மபால, பொன்னம்பலம் இராமநாதன், சித்திலெப்பை, டி. பி. ஜாயா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். கீழே சிறந்த தலைமைத் துவங்களை வழங்கிய தலைவர்கள் சிலரது புகைப்படங்கள் காணப்படுகின்றன.


**உரு 4.5 ஜவஹர்லால் நேரு**


**உரு 4.6 வின்ஸ்டன்ட் சேர்ச்சில்**


**உரு 4.7 மாட்டின் லூதர்**



உரு 4.8 சியட்டல்



உரு 4.9 நெல்சன் மண்டேலா

இவ்வாறாகச் சிறப்பாகச் செயற்பட்ட தலைவர்கள் சமூகத்தில் என்றுமே நினைவு கூறப்பட வேண்டியவர்களாவர்.

குறிக்கோள்களை வெற்றி கொள்வதற்குத் தலைமைத்துவத்தைப் பின்பற்றுவது அவசியமாகும். தலைவர்கள் காட்டித்தரும் வழிகாட்டல்களைப் பின்பற்றி நடப்பது பின்பற்றுவோரது பொறுப்பாகும். தலைவர்கள் பொறுப்பு வாய்ந்த விதத்தில் செயற்படுகின்ற அதேவேளை தலைமைத்துவத்தைப் பின்பற்றுவோரும் பொறுப்புவாய்ந்த வகையில் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும். தலைவர் சரியான தீர்மானங்களை மேற்கொண்டு, சரியான வழியைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்களுக்குக் கீழுள்ளோர் உதவ வேண்டும். தலைமைத்துவத்தைப் பயன்படுத்தித் தமது தனிப்பட்ட நலன்களை நிறைவேற்ற முயற்சிக்கக்கூடாது.

**தலைமைத்துவத்தை ஏற்றுப் பின்பற்றுவோரிடத்தில் பின்வரும் பண்புகள் இருப்பது அவசியமாகும்.**

- தலைமைத்துவத்தை நம்புதல்
- தலைவரின் கட்டளைகளை ஏற்றுச் செயற்படுத்துதல்
- தலைவருக்கு உதவுதல்
- தலைவரைப் பாதுகாத்தல்
- தலைவருக்கு மதிப்பளிப்பதல்

சிறந்த தலைவராக வரவிரும்புவோர் தலைவரைப் பின்பற்றி அவரிடமிருந்து நல்ல அனுபவங்களைப் பெறவேண்டும். ஒரு தலைவரிடத்தில் பின்பற்றுவோராக இருந்து பெறுகின்ற அனுபவம், முதிர்ச்சி என்பவற்றின் மூலம் பிற்காலத்தில் சிறந்த தலைவராக வரலாம்.

தலைவர்கள் தம்மைப் பின்பற்றுவோர் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாத்துப் பொறுப்புடன் செயற்படுவதும் முக்கியமானது.

எப்பொழுதும் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றுவோரும் தத்தமது கடமைகளையும், பொறுப்புகளையும் உணர்ந்து சுமுகமாகச் செயற்படுவதன் மூலம் சிறப்பை அடையலாம். இவ்வாறு செயற்படும் போது எந்தவொரு அமைப்பும் நிறுவனமும் தனது சிறந்த நோக்கங்களை வெற்றிகரமாக அடைந்து கொள்ள முடியும்.



**உரு 4.10**
**டி. எஸ் சேனநாயக்க**



**உரு 4.11**
**சித்திலெப்பை**



**உரு 4.12**
**சேர். பொன் அருணாசலம்**

தலைமைத்துவமும் அதன் செயற்பாடுகளும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவசியமாகின்றன. சிலவேளை அவசர நிலைமைகளிலும் தலைமைத்துவம் தேவைப்படலாம். அனர்த்தங்கள், விபத்துகளின் போது உடனடியாகத் தலைமைத்துவம் உருவாக முடியும். எவ்வித நல்ல நோக்கங்களை நிறைவேற்ற முயற்சி செய்யும் தலைமைத்துவத்திற்கும் தலைமைத்துவ ஆற்றலும் பின்பற்றுவோரது ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும். எனவே தலைமைத் துவத்தையும் நல்ல தலைமைத்துவத்தின் பண்புகளையும் விளங்குவதுடன், தலைமைத்துவத்தைப் பின்பற்றி நடப்பதும் சமூகப் பிரஜைகளாகிய எமது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

## செயற்பாடு IV

01. சிறந்த வகையில் தலைமைத்துவத்தைப் பின்பற்றுவோரிடத்தில் இருக்கக்கூடிய பண்புகள் குறித்து மாணவர் மன்றத்தில் நிகழ்த்தக்கூடிய உரையொன்றை எழுதுக.

## சாராம்சம்

- இயல்பாகவே சேர்ந்து வாழும் மனித சமூகத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தலைமைத்துவம் அவசியமானதாகும்.
- குறித்த இலக்கினை நோக்கிப் பின்பற்றுவோரை வழிநடத்துவதே தலைமைத்துவம் எனப்படுகிறது.
- சிறந்த தலைமைத்துவப் பண்புடையவர்கள் சமூகத்திற்கு அவசியமாவர்.
- நல்ல தலைவர்கள் மூலம் சமூகத்தின் உயரிய நோக்கங்களைச் சிறப்பாக அடைந்து கொள்ளலாம்.
- சிறந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு அனுபவமும் பயிற்சியும் அவசியமானது.
- தலைவர்களின் வழிகாட்டல்களைப் பின்பற்றி நடப்பது அவர்களுக்குக் கீழுள்ள அனைத்துப் பின்பற்றும் அங்கத்தவர்களினதும் கடமையாகும்.

## ஒப்படை

பிரபல்யமான தலைவர்களின் பண்புகளையும் அவர்கள் சமூகத்திற்காகச் செய்த சேவைகளையும் உள்ளடக்கியதாகத் தகவல் கோவை ஒன்றைத் தயாரிக்கவும். அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.